දුරකථන:
தொலைபேசி
Telephone:
සභාපති
தலைவர்
Chairman: (+94) 011 2556840

ලේකම්
செயலாளர்:
Secretary: (+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office: (+94) 011 2556834
011 3071324

ෆැක්ස්:
தொ.நகல்
Fax (+94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்:
e-mail fincom@sltnet.lk


**මුදල් කොමිෂන් සභාව**
( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ජ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)

**நிதி ஆணைக்குழு**
**(அரசியலமைப்பின் 154`எ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)**

**FINANCE COMMISSION**
**(Established under Article 154 R of the Constitution)**


48, වජිර පාර,
කොළඹ 04.

48,வஜிரா வீதி,
கொழும்பு-04,இலங்கை.

48,Vajira Road,
Colombo 04, Sri Lanka.


මගේ අංක
எனது இல:
My No FC/3/3/2015

ඔබේ අංක
உமது இல:
Your No

දිනය
திகதி:
Date 2015.03.25

## தமிழாக்கம்

## நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம்:- 2015/01

பிரதம செயலாளர்,
மேல் /மத்திய/தென் /வட/கிழக்கு/வடமேல் /வடமத்திய/ஊவா/சப்பிரகமுவ மாகாணம்

**<u>மூலதன நிதியின் கீழ் மாகாண வருடாந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செயற் படுத்தும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்</u>**

இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுரைகள் 2015 ஏப்பிரில் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அமுலாக்கப்பட வேண்டும். அதற்கமைவாக, நிதி ஆணைக் குழுவால் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட, இதே விடயம் தொடர்பான FC/PSDC & CBG/Circular/2011/1 என்னும் இலக்கமும் 2011.07.26 திகதியிடப் பெற்ற சுற்ற றிக்கை மற்றும் FC/PRP/C/2012 என்னும் இலக்கம் மற்றும் FC/3/32013 என்னும் இலக்கமும் கொண்ட, 2012.05.16 மற்றும் 2011.07.26 திகதியிடப் பெற்ற கடிதங்களால் அந்தச் சுற்றறிக்கைக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் யாவும் 2015 ஏப்பரில் 01 ஆம் திகதியிலிருந்து நீக்கப் படுகிறது.

இப் புதிய சுற்றறிக்கையைத் தயாரிக்கும் போது மாகாணங்கள் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சிரேஷ்ட ஊழியர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. அதற்கு அமைவாக, மூலதன நிதியின் கீழ் மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டம் அமுலாக்கும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

### 1. கட்டுமான நடவடிக்கைகள்

### 1.1. கட்டிட நிர்மாணம்

நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்ட வருடாந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட கட்டட கட்டுமானம் தொடர்பான மதிப்பீடு தயாரிக்கும்போது, தொடர்பான திணைக்கள த்தலைவர்கள் , பொறியியலாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் அந்த கட்டுமானம் தேவைக்கு பொருத்தமுடையதாகவும் மதிப்பிடப்பட்ட தொகை சாதாரணமானதாக உள்ளதாகவும் கவனித்துக் கொள்ள வேண்டும். அதுபோல சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய பகுதிகள் தொடர்பான மத்திய அரசின் நிறுவனங்களால் கட்டிடங்கள் கட்டும்போது தற்போது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டமைப்பு திட்டங்கள் (Type Plan) பின்பற்றப்பட வேண்டும். அப்படியாக, சாதாரணமாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் தேவைகளுக்குப் பொருத்தமுடைய வகையில் திருத்தங்கள் செய்ய முடியும்

மேலும், ஏதாவது கட்டுமானத்தை பகுதியாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்தால், முழுமையான கட்டுமானம் தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் பின்னர் பகுதியாக பூர்த்தி செய்ய வேண்டும். எதிர்பார்க்கும் முழுமையான கட்டுமானம் திட்டமிட்ட பின்னர் முதலில் அந்த முழுமையான திட்டத்துக்கும் மற்றும் முழுமையான செலவுக்கும், எதிர்பார்க்கும் பகுதி எண்ணிக்கைகளுக்கும் இடையில் ஒவ்வொரு பகுதி செலவும் மதிப்பிடப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அனுமதி பெறப்படவேண்டும். இதன் பின்னர் முதற் பகுதி கட்டுமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் அப்படியாக பூர்த்தி

செய்யப்பட்ட பகுதிகள் பயனாளிகளின் பாவனைக்கு வழங்கப்பட வேண்டும். அப்படியில்லாத கட்டுமானங்கள் பகுதியாக ஒதுக்க முடியாது. தவிர்க்க முடியாத காரணங்களால் ஏதாவது கட்டுமானங்களுக்கு இடையில் வேறு வேலைகள் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அது தொடர்பான நியாயப்படுத்தலை சமர்ப்பிக்க வேண்டும். அப்படி, இடையில் சேர்த்துக் கொள்ளப் படுவதை உள்ளடக்குவதால் மதிப்பிடப்பட்ட தொகை அதிகரித்தால், நிதி ஆணைக்குழுவினதும், மதிப்பீட்டுத் தொகை வேறுபடாவிட்டால் , பிரதம செயலாளரால் அல்லது பிரதம செயலாளரால் அதிகாரக் கையளிப்பு பெறும் உத்தியோகத்தரால் அனுமதி வழங்கப்படவேண்டும்.

சகல கட்டிடங்களின் கட்டுமானங்கள் தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல், அந்த வேலைகளைச் சோதனையிடுதல் மற்றும் கொடுப்பனவு தொடர்பான பரிந்துரைகள் ஆகியவற்றுக்காக உத்தியோகத்தர்கள் என மூன்று பேரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுபோல, வழங்கப்படும் ஒதுக்கீடுகளை எண்ணிக்கையில் அதிகமான கட்டிடங்கள் கட்டுவதற்கு பகிர்ந்து வழங்கி, அக் கட்டிடங்களின் பகுதிகளை பூர்த்தி செய்வதற்குப் பதிலாக வருடத்தினுள் வழங்கப் பட்ட ஒதுக்கீடுகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக ஒதுக்கி அந்த வருடத்துக்குள் அவற்றைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**கட்டிடங்கள் கட்டும்போது கவனிக்க வேண்டிய பொதுவான விடயங்கள்:**

i. கட்டப்படும் கட்டிடங்களால் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் சேவைகள் தொடர்பான விடயங்களை நன்கு திட்டமிடுவதோடு, அந்த சேவைகளை வழங்குவது தொடர்பாக அத்தியாவசிய பகுதிகள் மட்டும் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் பொது மக்களுக்கு சுலபமாகவும் மற்றும் வினைத்திறமையுடனும் சேவைகளை வழங்குவதற்கு வசதியானவகையில் கட்டிடங்கள் திட்டமிடப்படவேண்டும்.

ii. தற்போது மாகாணத்திலுள்ள பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத கட்டிடங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அத்தகைய கட்டிடங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன்பாக தற்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கும்- மற்றும் இடையில் நிறுத்தப் பட்டிருக்கும் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

iii. கட்டிடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடுவதற்கு சமாந்திரமாக அக் கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்கு அத்தியாவசியமான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் மனிதவளம் தொடர்பாக தேவைகளை மதிப்பீடு செய்து அது தொடர்பான தகவல்கள் மற்றும் செலவு மதிப்பீடுகள் திட்டஅறிக்கைகளில் உள்ளடக்கப்படுவதோடு, அவற்றால் கட்டிடங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

iv. பாடசாலை, வைத்தியசாலை அல்லது அரசாங்க பொதுக் கட்டிடங்கள் மற்றும் மைதானங்களைச்சுற்றி சுவர் கட்டுவதற்கு பகிர்வுகள் ஒதுக்கக் கூடாது. பாடசாலை நேரத்தின் பின்னர் பாடசாலை விளையாட்டு மைதானம் மற்றும் ஏனைய பொது விளையாட்டு மைதானம் தொடர்பான நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு பொதுமக்களுக்கு விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக பயன்படுத்துவதற்கு வசதியாக திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

v. அலுவலகக் கட்டிடங்கள் மின்சார வெளிச்சம் மற்றும் காற்று குளிரூட்டிகள் குறைவான அளவு பாவிப்பதற்கு வசதியாக அக் கட்டிடங்களை அமைக்கும் போது காற்று மற்றும் வெளிச்சம் கிடைக்கத்தக்கதாக திட்டமிடல் வேண்டும்.

vi. மாடிக் கட்டிடங்களை அமைக்கும்போது முடிந்தளவுக்கு அதிகபட்சமாக இரண்டு மூன்று மாடிகளுக்குள் மட்டுப்படுத்தப் பட்டதாக கட்டுவதோடு, மின்தூக்கிகளை இணைப்பது குறைக்கப்பட வேண்டும். அப்படியானாலும், சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் வலது குறைந்தோருக்கு கட்டிடங்களில் நுழைவதற்கும் மற்றும் அவசிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்றவகையில் அவை திட்டமிடப்பட வேண்டும்.

vii. உத்தியோகத்தர்களுக்காக உத்தியோக பூர்வ வதிவிடம் அமைக்கும்போது வாகன நிறுத்துமிடம், விறாந்தை மற்றும் ஏனைய பகுதிகள் உள்ளடங்கலாக பதவிநிலை உத்தியோகத்தருக்காக கட்டப்படும் வீடு சதுர அடி 1,750 க்கும், ஏனைய

உத்தியோகத்தருக்காக கட்டப்படும் வீடு சதுர அடி 1,200 க்கும் மேற்படாதிருக்க வேண்டும். உத்தியோக வதிவிடம் அமைக்கும்போது தற்போதுள்ள திட்டம் (Type Plan) தற்போதைய தேவைகளுக்குப் பொருத்தமற்றதாகவும் மற்றும் பிரமாணத்தால் மிகவும் விசாலமானது எனத்தெரிய வந்துள்ளது. ஆகையால், மேற்குறிப்பிட்ட சதுர அடி பிரமாணத்துக்குள் உத்தியோக வதிவிடம் அமைப்பது தொடர்பாக திட்டம் தயாரிக்கப்படவேண்டும். மேலும் இடத்தை சிறப்பாக பயன்படுத்துவதை நோக்கி இரண்டு மாடிகளைக் கொண்ட உத்தியோக வதிவிடம் அமைக்கத் திட்டமிடுவது மிகவும் உசிதமானதாகும்.

### 1.2. வீதிகள் அமைத்தல்

வீதிகள் அமைக்கும்போது கொங்கிறீட் அல்லது தார் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது போல, வீதியில் மதகு, பாலம், பக்க கான் ஆகியவற்றை அமைக்காமல் வீதிகளை அமைக்கக் கூடாது. கிராமத்து உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர் பாக நகரங்களுக்கு எளிதாக பிரவேசிப்பதற்கு வசதியாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி வீதி A மற்றும் B வீதிகளோடு இணைக்கப்பட வேண்டும். வீதிகள் சேதமடைவதைத் தவிர்க்கும் பொருட்டு வீதிகளை அமைக்கும் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாகப் பேணுவது தொடர்பாக பொருத்தமான வேலைத்திட்டங்களையும் தயாரிக்க வேண்டும்.

### 1.3. சிறிய குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசன மீள நிர்மாணித்தல்

சிறிய குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் மீள நிர்மாணித்தல் தொடர்பாக முதலீடுகள் செய்யும்போது தொடர்பான நீர்த்தேக்கங்கங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலில் இருந்து விவசாய நிலங்கள் வரையில் நீரை வழங்குவதற்கு தேவையான சகல பகுதிகள் தொடர்பாகவும் ஆராய்ந்த பின்னர், நீரைச் சேகரித்து வைத்திருத்தல் மற்றும் வயல்களுக்கு நீரை வழங்குவதற்கு அவசியமான சகல பகுதிகளும் இயங்கக்கூடியதாக அபிவிருத்தி நடவடிக்கைகள் செய்வதற்கு முதலீடுகள் செய்யப்பட வேண்டும். அப்படி யில்லாமல் நீர்ப்பாசன திட்டத்தில் புள்ளி விபரங்களைப் பெரிதாக்கி பயனற்ற வகையில் முதலீடுகள் செய்யக் கூடாது. சிறிய குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் மீள நிர்மாணித்தல் தொடர்பாக விவசாய அமைப்புக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும்.

## 2. பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் தொடர்பாக நேரடியாக ஒப்பந்தங்களை வழங்கல் மற்றும் மாகாணத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட விலைக்கூறுகளைக் கோருதல்

காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட தேசிய பெறுகை வழிகாட்டுதல்களில் தெரிவிக்க ப்பட்டுள்ள எல்லைகளுக்கு மேற்படாத வகையில் மாகாணத்துக்குப் பொருத்தமான எல்லைகள் பிரதம செயலாளர் தலைமையில் மற்றும் தொடர்பான உத்தியோகத் தர்கள் கலந்துகொண்ட குழுப் பரிந்துரை மற்றும் ஆளுநரின் அனுமதியுடன் தீர்மா னிக்கப்பட வேண்டும். ஒப்பந்தங்களை வழங்கும்போது தேசிய பெறுகை வழிகாட்டு தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3. நிர்மாணித்தல் தொடர்பாக நிறுவன தலைவருக்கு தெரிவித்தல் மற்றும் நிர்மாணித்தல் தொடர்பாக தகவல்களை காட்சிப்படுத்தல்.

எந்த டென்டரும் வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தோடு தொடர்பான மதிப்பீடு மற்றும் அதற்கமைவாக செய்யப்பட வேண்டிய வேலைப் பட்டியல் ஆகியவை தொடர்பான நிறுவனத் தலைவ ( உ-ம்: பாடசாலைக் கட்டிடம் எனின் பாடசாலை அதிபர், வைத்தியசாலைக் கட்டிடம் எனின் தொடர்பான வைத்தியசாலைத் தலைவர் ) ருக்கு வழங்கப்பட வேண்டும். சகல நிர்மாணிப்புகளிலும் தீர்மானம் எடுக்கும் நடைமுறைகளில் தொடர்பான நிறுவனத் தலைவரை இணைத்துக் கொள்ள வேண்டும். மதிப்பீடு மற்றும் வேலைப்பட்டியல் ஆகியவற்றின் பிரதி நிறுவனத் தலைவருக்கு வழங்கி மேற்பார்வை வேலைகளில் இணைத்துக் கொள்ள வேண்டும். இறுதிக் கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு முன்பு தொடர்பான நிறுவனத் தலைவரின் வேலை தொடர்பாக திருப்தி என்ற பரிந்துரையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வீதி மற்றும் கட்டிடங்கள் உள்ளடங்கலாக சகல நிர்மாணித்தல்களிலும் ஒப்பந்தக் காரரின் பெயர், மேற்பார்வை உத்தியோகத்தரின் பெயர், ஒப்பந்தத் தொகை, நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வேலைப்பட்டியல், ஒப்பந்தக் காலம் உள்ளிட்ட தகவல் பயனாளிகள் படித்தறிந்து கொள்ளத்தக்க வகையில் நிர்மாணித்தல் நடை பெறுமிடத்தில் காட்சிப் படுத்த வேண்டும். அதற்கு அமைவாக, நிர்மாணித்தலில் தரங்களை மேற்பார்வை செய்வது தொடர்பாக தாமாக முன் வரும் பயனாளி களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும், நிர்மாணித்தல் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்தால், அது தொடர்பாக அறிவிப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தர் பெயர், மற்றும் தொலைபேசி இலக்கம் காட்சிப்படுத்த வேண்டும். அது போன்ற தகவல்கள் அந்த நிறுவன இணையத்தளத்திலும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**4. பொருட்கள் கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய பொது விடயங்கள்**

வைத்திய உபகரணங்கள் உள்ளிட்ட சகல உபகரணங்களும் விலைக்கு பெற்றுக் கொள்ளும்போது முன்னுரிமைப் படுத்துவதோடு, தற்போதுள்ள உபகரணங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதோடு, அந்த உபகரணங்களின் சிறந்த பயன்பாட்டை முழுமையாகப் பெற்ற பின்னர் புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்ய ஆலோசனைகள் சமர்ப்பிக்க வேண்டும். கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படும் உபகரணங்கள் பாவிப்பதற்கு அவசிய மான அறிவு, பயனுள்ள பாவனை தொடர்பாக தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் அவற்றை நிறுவுவதற்குத் தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். கொள்வனவு செய்யும் உபகர ணம் பேணுவது தொடர்பான வேலைத்திட்டம் விலைக்கு கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**5. வாகனம் கொள்வனவு செய்தல்**

வாகனம் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக பொதுத் திறைசேரியால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். அது தொடர்பாக பொதுத் திறைசேரி மற்றும் நிதி ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். பாவனைக்கு எடுத்துக் கொள்ள முடியாத வாகனம் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக ஆண்டுதோறும் கழித்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் பெறப்படும் வருமானம் மாகாண நிதிக்கு வைப்புச் செய்யப்பட வேண்டும்.

**6. நேரடியாக கொடைகள் வழங்குதல்**

வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நேரடிக்கொடை (உறுப்பினர் ஒதுக்கீட்டின் கீழே காட்டப்பட்டுள்ள விசேட விதிகள் தவிர்ந்த) ஒவ்வொரு தனியா ளுக்கு அல்லது குடும்ப அலகுக்கு தனிப்பட்ட வகையில் வழங்குவதற்காக நேரடிக் கொடையின் பெறுமதியில் குறைந்த பட்சம் 50% பயனாளின் பங்களிப்பாக பெற்றுக்கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப் படும் நேரடிக்கொடை தொடர்பாக சங்கத்தின் பங்களிப்பு வீதமாக ஒவ்வொரு நேரடிக் கொடையின் தன்மைக்கு அமைவாக 40% குக் கீழாக பிரதம செயலாளரால் தீர்மானிக்கப்பட வேண்டும். வழங்கப்படும் சகல நேரடிக்கொடைகளும் வருமானம் தருவித்தலை நோக்காகக் கொண்டு வழங்கப்படுவதோடு, பாவனைப் பொருளின் தன்மைக்காக கொள்வனவு செய்யும் பொருட்டு நேரடிக்கொடை வழங்கக் கூடாது. இப்படியாக வழங்கப்படும் நேரடிக்கொடையைப் பயன்படுத்தி செய்யப்படும் நடவடிக்கைகள் மற்றும் அதனால் பெற்றுக்கொள்ளப் பட்ட நன்மைகள் தொடர்பாக தகவல் சேகரித்து, வருட முடிவில் முன்னேற்ற அறிக்கை தயாரிக்க வேண்டும்.

**7. கழிவுப் பொருள் முகாமைத் திட்டம்**

கழிவுப் பொருள் சேருமிடங்களில் வகைப்படுத்தல், கழிவுப்பொருளை மீள் சுழற்சிக் குள்ளாக்கல், கழிவுப்பொருளைப் பயன்படுத்தி காபன் பசளை உற்பத்தி மற்றும் ஏனைய கழிவுப்பொருளை பயன்படுத்தும் சாத்தியமுள்ள திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும். அப்படியாக, மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை, அளவுகோல் அடிப்படை அபிவிருத்திக்கொடை , மாகாண சபை ஒதுக்கீடுகள், பிரதேச சபை ஒதுக்கீடுகள்,தேசிய அமைச்சு ஒதுக்கீடுகள், வெளிநாட்டுத்திட்ட நன்கொடைகள், அரச சார்பற்ற நிறுவன அல்லது தனியார் துறை ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி நிறுவப்பட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டங்கள் சுற்றியுள்ள பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அதனைச் சுற்றியுள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, மக்களைக் கொண்ட மேற்பார்வைக் குழு மூலம் சம்பந்தப்பட்ட திட்டம் சுகாதாரப் பாதுகாப்புடன் செயற்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்தக் குழுவுக்கு அப்பகுதியைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர், பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகர், சுற்றாடலில் வழிபாட்டிடம் இருப்பின் அதன் தலைவர், சுற்றிவாழும் கிராமவாசிகளில் ஆகக்குறைந்தது ஐந்து பேர் மற்றும் மாகாண சபையால் தீர்மானிக்கப்படும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதோடு, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது தொடர்பான திட்டம் தொடர்பாக மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை மாகாண சபை மற்றும் பிரதேச சபைகளின் தொடர்பான அதிகாரிகளால் இந்த மேற்பார்வைக் குழுவிடமிருந்து பெறப்படுவதோடு, அந்த அறிக்கைகளில் காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், திட்டத்தைக் கொண்டு நடாத்துவது மற்றும் மேலும் முன்னேற்றுவது தொடர்பாக ஒதுக்கீடு வழங்குதலில் மேற்படி மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**8. அளவுகோல் அடிப்படைக் கொடையின் கீழ் மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பாக வழங்கப்படும் ஒதுக்கீடு செலவு செய்யும்போது பின்பற்றவேண்டிய நடைமுறை**

மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பாக வழங்கப்படும் ஒதுக்கீடு செலவு செய்யும் போது மாகாண சபையால் பின் வரும் வீதங்கள் பின்பற்றப் படவேண்டும்.

| | |
|---|---|
| சுயதொழில் ஆரம்பித்தல் | 25 % |
| பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 25 % |
| சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 30 % |
| நீர்ப்பாசனம் மற்றும் விவசாய கைத்தொழில் அபிவிருத்தி | 10 % |
| சமய, கலாசார மற்றும் விளையாட்டு அபிவிருத்தி | 10 % |
| **மொத்தம்** | **100 %** |

**8.1 சுய தொழில் ஆரம்பித்தல் - 25 %**

உறுப்பினர் ஒதுக்கீட்டில் 25 % பயன்படுத்தி இதன் கீழ் உதவி வழங்க முடியும் சுயதொழில் முயற்சி ஆரம்பிப்பதற்கு அல்லது ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளை மேலும் விருத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பவருக்கு. அதற்காக தேவையான உபகரணங்களை விலைக்கு கொள்வனவு செய்வதற்காக கீழே K மற்றும் I ஆகியவற்றின் கீழ் பயிற்சி செலவுக்காக நேரடிக்கொடை வழங்க. சகல திட்டங்கள் தொடர்பாக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அதன் பொருட்டு மாகாண சபையின் தொடர்பான விடயத்துக்கு பொறுப்பான திணைக்களத்தலைவருடைய அல்லது மாகாண திட்டமிடல் பகுதியின் பரிந்துரை பெறப்பட வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட உதவி பயனுள்ள வகையில் மாற்றப்பட்டு முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு விடயத்துக்கு பொறுப்பான திணைக்களத்தலைவர் மற்றும் மாகாண திட்டமிடல் பகுதியால் தகவல்கள் பெறப்பட வேண்டும்.

இதன் கீழ் கீழே குறிப்பிடப்படும் வியாபார முயற்சிகள் தொடர்பாக தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்ய அல்லது பயிற்சி தொடர்பாக நேரடிக்கொடை வழங்க வேண்டும்.

a. வீட்டுப் பொருட்கள் உற்பத்தி
b. மின் உபகரணங்கள் திருத்துதல்,வாகனங்கள் திருத்துதல்
c. புடவைக் கைத்தொழில்
d. அழகு நிலையம் மற்றும் தலையலங்காரம்
e. உணவு மற்றும் வாசனைத்திரவியங்களின் பெறுமதி சேர்ந்த உற்பத்திகள்
f. அலங்காரப் பொருட்கள் மற்றும் கைப்பணி உற்பத்திகள்
g. தும்புக் கைத்தொழில்
h. நன்னீர் மீன் வளர்ப்பு ( வள்ளம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள்)
i. விலங்கு வேளாண்மை
j. வலது குறைந்தவர்களின் வர்த்தக நடவடிக்கைகள்
k. தொழிலை இலக்கு வைத்து பார ஊர்தி மற்றும் இயந்திர உபகரணங்கள் செலுத்துவது தொடர்பான பயிற்சி.
l. தொழிலை இலக்கு வைத்து வெளிநாட்டு மொழிப் பயிற்சி

மேலேயுள்ள வியாபார முயற்சிகளின் கீழ் சுய தொழில் தொடர்பாக தேவையான உபகரணத் தொகுதி பெற்றுக்கொள்வதற்கான செலவில் 80 % வீதம் அல்லது அதற்குக் குறைந்த வீதம் நேரடிக் கொடையாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு, அதன் பொருட்டு உறுப்பினர் ஒதுக்கீட்டில் பங்களிப்பு உயர்ந்த பட்ச தொகை ரூ.40,000 / - ஆகும். ஊபகரணங்களுக்காக தேவையான தொகை ரூ.40,000 / - க்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் மிகுதிப் பணம் பயனாளியால் வழங்கப்படும் என உறுதிப்படுத்திய பின் உதவு தொகையை விடுவிக்கலாம். பயனாளியால் செலுத்தப்பட வேண்டிய பகுதி செலுத்தப்பட்டது என்பது உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு பயனாளினதும் பொருளாதார மட்டத்தைக் கவனத்தில் எடுத்து பயனாளியால் செலுத்தக்கூடிய வீதம் 20 % வீதத்துக்கு கீழ் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பான விதிமுறைகள் பிரதம செயலாளரால் அறிமுகம் செய்து வைக்கப்ப படும். பார ஊர்தி மற்றும் இயந்திர உபகரணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிவு செய்த நிறுவனங்களில் பயிற்சி பெற்றுக்கொள்வதோடு, அதன் பொருட்டு ரூபா.10,000 என்ற மேல்எல்லைத் தொகையாகவும், தொழிலை இலக்கு வைத்து வெளிநாட்டு மொழிப் பயிற்சி தொடர்பாக ரூபா.9,000 மேல்எல்லைத் தொகைக்கு கீழ் உதவி பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் பயிற்சி NVQ சான்றிதழோடு சமமாக இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேறு பயனாளி நடைமுறையால் ஏற்றுக்கொள்ளப்படாத இதற்கு முன்னர் இது போன்ற உதவிகள் பெற்றுக்கொள்ளாதோர் இதற்காக தெரிவு செய்யப்பட வேண்டும். இந்த உதவிகள் வழங்குவதில் கீழ் வருவோருக்கு முன்னுரிமை காட்டப்பட வேண்டும்

1. 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள், யுவதிகள்
2. விதவைகள்
3. அங்கவீனர்கள்

மேலும் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது சம்பந்தப்பட்ட வியாபாரத்தை ஆரம்பிப்பது தொடர்பான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணம் விண்ணப்பதாரியின் தனிப்பட்ட சொத்துக்களில் இருந்து பெற முடியாது எனவும், தேவையான பணத்தை வங்கி கடன் வழங்கும் திட்ட மூலம் விண்ணபதாரி பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது எனவும் அதிகாரி திருப்திப்பட வேண்டும். அது போல திட்டமிடும் வியாபாரத்தை சாத்தியமாகக் கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் விண்ணப்பதாரிக்கு உள்ளதாகவும் அதிகாரியால் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். சுயதொழில் முயற்சியை நோக்கி அபிவிருத்தி வங்கி மூலம் சுலபமான கடன் பெற்றுக்கொள்வதற்கு பயனாளிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 8.2. பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி- 25 %

இதன் கீழ் உறுப்பினர் ஒதுக்கீட்டில் 25 % வீதம் வரை கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும்.

கிராமத்துக்குள் மற்றும் கிராமங்களுக்கிடையில் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு இதனால் செய்யமுடிவதோடு, கிராமத்தின் பொது இடங்கள்( பாடசாலை, சமய நிலையங்கள், சந்தைகள், சுகாதார நிலையங்கள், பொதுக்கிணறுகள், மயான பூமி போன்றவை) தொடர்பாக உள்ளே செல்லும் பாதைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். பாதைகளில் பக்கக்கான், மதகு மற்றும் சிறிய பாலம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக உறுப்பினர் ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுக்க வேண்டும். சிறிய பாதைகளை கொங்கீறீட் செய்வதற்கும் விசேட அவதானம் செலுத்த வேண்டும். பொதுப் போக்கு வரத்து தொடர்பாக அவசியமான படிகளையும் அமைத்துக் கொள்ள முடியும். மண் வேலைகள் இருப்பின் பயனாளிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதோடு, மண் வேலைகள் செய்வதற்காக இந்த நிதியை செலவிடக் கூடாது. அது போல, அபிவிருத்தி செய்வதற்காகத் தெரிவு செய்யும் பாதை, கிராம அபிவிருத்திப் பாதை, விவசாயப்பாதை மற்றும் தனித்துவிடப்பட்ட கிராம அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்படும் ஒதுக்கீட்டை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும் பாதைகளோடு இரட்டிப்பு ஏற்படுத்தாதிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

#### ii. குடிநீர் வழங்கல்

பொருத்தமான மாற்று நீரை சிறந்த குடிநீராக வழங்குவதை இதன் கீழ் நிறைவேற்ற முடியும். நீரின் சிறந்த தரம் தொடர்பாக நீர்வழங்கல் சபையின் உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தண்ணீர் திட்டம் தொடர்பாக தற்போதைய நிர்வாக அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்க முடியும். குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிக்கும் போது அதனை பாவனைக்கு எடுக்க முடியும் என்பதையும், திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதையும் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திருப்திப்பட வேண்டும்.

#### iii. மின்சாரம்

சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சு செயலாளரால் தீர்மானிக்கப்படும் குறைந்த வீடுகள் உள்ள பகுதிக்கு மின்சார நீடிப்பைப் பெற்றுக் கொடுக்க உதவிகள் வழங்க முடியும்.

### 8.3. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி- 30 %

இதன் கீழ் உறுப்பினர் ஒதுக்கீட்டில் 30 % வீதத்தைப் பயன்படுத்தி

#### i. கல்வி

இதன் கீழ் அரசாங்க பாடசாலைக் கட்டிடங்கள் திருத்துதல், பாதுகாப்பு வேலிகள் மற்றும் கதவுகள் அமைத்தல், சுகாதார நடவடிக்கை மற்றும் குடிநீர் வழங்கல், விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா அமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றலாம். மதிற்சுவர் கட்டுவதற்காக நிதி ஒதுக்கக் கூடாது.

பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி தொடர்பாக மேசை, கதிரை மற்றும் அத்தியாவசிய உபகரணங்கள் வழங்குவதாக இருந்தால் ஆகக்கூடிய தொகையாக ரூபா.20,000 /- ஆக இருக்க வேண்டும். முன்பள்ளிகளுக்கு வழங்கும் உபகரணங்களின் பட்டியல் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சுச் செயலாளரால் தீர்மானிக்கப்பட வேண்டும். வழங்கப்படும் உபகரணங்களின் தரம் குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வதோடு, அவ்வாறு வழங்கப்படும் உபகரணங்களுக்கான பதிவேடும் தயாரிக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவனம் / பாடசாலை நூலகங்கள் ஆகியவற்றுக்கு நூல்கள் வழங்குவதாக இருப்பின் ஆகக் கூடிய பெறுமதி ரூபா.25,000/- ஆக இருப்பதோடு, தற்போது போதியளவு நூல்கள் இல்லாத நூலகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

கல்வியில் மிகவும் திறமையுள்ள ஆனால் குடும்பத்தில் வருமான மட்டம் குறைவாக உள்ளதால் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் கொள்வனவு செய்ய முடியாத மாணவர் ஒருவருக்காக ஆண்டொன்றுக்கு ரூபா.5,000/- என்ற உயர்ந்த தொகைக்கு கீழ் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்க முடியும். குடும்ப வருமானம் தொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தரால் மற்றும் குறிப்பிட்ட மாணவரின் திறமை தொடர்பாக பாடசாலை அதிபரால் சிபார்சு , தொடர்பாக வகுப்பாசிரியர் மூலம் சம்பந்தப்பட்ட மாணவருக்கு அன்பளிப்பு செய்வதோடு, அது தொடர்பாக பாடசாலையின் ஏனைய மாணவருக்கு அறிவிக்கக் கூடாது. மாணவருக்கு பொதுவாக புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கக் கூடாது.

### ii. வைத்தியம் (மேலைத்தேசம் மற்றும் ஆயுர்வேதம்)

மேலைத் தேசம் மற்றும் ஆயுர்வேத வைத்திய அபிவிருத்தியை நோக்கி ஒதுக்கீடு பயன்படுத்துவதானால், கிராமங்களிலுள்ள மருத்துவ நிலைய(கிளினிக்) கட்டிடங்கள் திருத்துதல், நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தலாம். மேலும், கிராமிய சுகாதார மத்திய நிலையங்களுக்கு தேவையான கதிரை / வாங்கு ஆகியவற்றையும் வழங்க முடியும். வழங்கப்படும் பொருட்கள் அந்தந்த சுகாதார மத்திய நிலைய பொருட் பதிவேட்டில் உள்ளடக் கப்பட வேண்டும்.

மேலும், கஷ்ட நிலையிலுள்ள குடும்பங்களில் அங்கவீனர்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு ரூபா.35,000/- என்ற உச்சவரம்புக்குக் கீழ் அவர்களின் நாளாந்த சீவியத்தை எளிதாக்கக்கூடிய விசேட உபகரணங்கள் வழங்க முடியும். இந்த உபகரணங்கள் அவர்களின் அங்கக் குறைபாட்டு நிலையை குறைப்பதற்கு உதவும் வகையில் பெற்றுக் கொடுப்பதோடு, உபகரணத்தின் பெறுமதி ரூபா. 15,000/- க்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

### iii. வீடமைப்பு

வீடுகட்டும் நடவடிக்கையின் பொருட்டு பயனாளிக்குடும்பம் ஒன்றுக்கு ரூபா.40,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக உதவு தொகை வழங்க முடியும். பயனாளி யால் வசிப்பதற்குப் பொருத்தமான வகையில் வீடு கட்டப்பட்ட தகவல்களைப் பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியாக, பயனாளியின் பங்களிப்புடன் சுய உதவி அணுகுமுறை (Aided self-help Approach) பெற்றுக் கொள்ளப் பட வேண்டும். மேலும் வீடமைப்பு அமைச்சு வேலைத்திட்டத்தோடு இணைந்ததாக இரட்டிப்பாக இருக்கக் கூடாது.

மேலும், பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொள்ளும் பிள்ளைகள் இருக்கும் வீட்டுகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பயனாளிக்குடும்பம் ஒன்றுக்கு ரூபா.15,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக உதவு தொகை வழங்க முடியும். வீட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்படும் உதவித்தொகை மின்சாரத்தை வழங்கும் நிறுவனத்துக்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டும்.

மேற் குறிப்பிட்ட உதவி தொடர்பாக உரித்துடைய குடும்பங்கள் கீழேயுள்ள வற்றையும் உடையதாக இருப்பது அவசியம்.

i. வறுமை நிவாரணம் பெறுபவராயிருத்தல்
ii. குடும்பத்தில் வருமானத்தை ஈட்டியவர் காலமாகிய காரணத்தால் அசாதாரண நிலைக்கு தள்ளப்பட்டுள்ள குடும்பம்
iii. பெண் பிரதான குடியிருப்பாளராகவும் குறைந்த வருமானம் பெறுவதாகவும் உள்ள குடும்பம்

### iv. கிராம அபவிருத்தி நடவடிக்கை.

மாகாண சபையில் கிராம அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு செயலாளர் திருப்திப்படுமிடத்து 2 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு நடாத்தப்பட்டு தற்போது தேவையான அளவு கதிரை மற்றும் தகரப்பந்தல் இல்லாத அந்தியகால சேவைச் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பாக கடந்த 4 வருடங்களுக்குள் அது போன்ற உதவிகளைப் பெற்றுக் கொள்ளாத சங்கங்களுக்கு ரூபா.30,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக கதிரை மற்றும் தகரப்பந்தல் ஆகியவை வழங்க முடியும். இந்த உபகரணங்கள் பொது நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாகப் பயன்படுத்துவதோடு, சம்பந்தப்பட்ட நிறுவன பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட வேண்டும். மேற் குறிப்பிட்ட பொருட்கள் பெற்றுக்கொள்ளும்போது தொடர்பான பிரதேச செயலாளருடைய அல்லது மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சு செயலாளருடைய பரிந்துரை மற்றும் தொடர்பிணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதோடு, முறையான பதிவுகள் பொருட்பதிவேட்டிலும் செய்யப்பட வேண்டும்.

மேலும், பாடசாலை, வைத்திய நிலையம்(கிளினிக்), டிஸ்பென்சரி மற்றும் கிராம அபிவிருத்தி மண்டபம் போன்ற பொது நிலையங்களுக்கு ரூபா.30,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக மின்சாரம் வழங்க முடியும். அது போன்ற சந்தர்ப்பங்களில் மின்சாரத்தை வழங்கும் நிறுவனத்துக்கு பணக் கொடுப்பனவு செய்யப்படவேண்டும்.

மேலும், இதன் கீழ் மக்களின் சுகாதாரத்துக்குக்காக பொது கிணறு திருத்துதல், அல்லது நிர்மாணித்தல் மற்றும் அக் கிணற்றின் தரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றுக்குத் தேவையான பொருட்களுக்காக ரூபா.25,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக உதவு தொகை வழங்க முடியும். இதன் பொருட்டு பயனாளிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

### 8.4. நீர்ப்பாசன மற்றும் விவசாயக் கைத் தொழில் அபிவிருத்தி – 10 %

இதன் கீழ் உறுப்பினர் ஒதுக்கீட்டில் 10 % வீதத்தைப் பயன்படுத்தி

### i. நீர்ப்பாசனம்

குளம் அல்லது நீர்த்தேக்கம் தவிர வேறு சிறிய நீர்ப்பாசனங்களை அமைத்தல், மீள நிர்மாணித்தல்: நீர்வேலி அமைத்தல் மற்றும் மீள நிர்மாணித்தல் இதன்கீழ் நடைமுறைப்படுத்த முடியும். இதன் பொருட்டு பயனாளிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது கட்டாயம் என்பதோடு, ஒரு திட்டத்துக்காக உறுப்பினர் ஒதுக்கீட்டில் பயன்படுத்தக் கூடிய உச்ச தொகை ரூபா.40,000/- ஆகும்.

### ii. விவசாய உபகரணங்கள்

விவசாய உபகரணங்கள் வழங்குவதானால் அவை பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும். விவசாய அமைப்புகளுக்கு வழங்கக்கூடிய விவசாய உபகரணங்களின் பெறுமதியின் உச்ச தொகை ரூபா.50,000/- ஆகும். மாகாண விவசாய பணிப்பாளரிடமிருந்து அல்லது பிரதம செயலாளரால் தீர்மானிக்கப்படும் உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள் வழங்கப்படுவதோடு, விவசாய அமைப்புகளின் அவை பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும்.

விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் விவசாயிகளளுக்கிடையில் பயன் படுத்தப்படும் பொருட்கள் என்பதோடு, தனித்தனியாக விவசாயிக்கு பாவனைக்கு எல்லைப்படுத்த பொருட்கள் வழங்க முடியாது மேலும் இதற்கு முன் விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் விவசாயப்பொருட்கள் தொடர்பாக மற்றும் பாவனை தொடர்பாகவும் மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும்
பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நீர்ப்பாசன மற்றும் விவசாயக்கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக உறுப்பினர் ஒதுக்கீடு பயன்படுத்துகையில் இந்த நடவடிக்கைகளில் பயன் பெறும் குறைந்த எண்ணிக்கையான பயனாளிகள் தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சு செயலாளரால் நியமிக்கப்படும் குழு மூலம் தீர்மானிக்கப்படும் அவசிய நிர்ணயங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

### 8.4. சமய, கலாசார மற்றும் விளையாட்டு அபிவிருத்தி

இதன் கீழ் உறுப்பினர் ஒதுக்கீட்டில் 10 % வீத நிதியைப் பயன்படுத்தி

**i.** **சமய, மற்றும் கலாசார நடவடிக்கை**

இதன் கீழ் சமய மற்றும் கலாசார விழா தொடர்பாக மற்றும் பராம்பரிக நடனக்குழு மற்றும் கலை நடவடிக்கைகளைப் பாதுகாப்பதற்கு உதவி வழங்க முடியும். அது தொடர்பான நிர்ணய விபரம் மற்றும் 10 % வீத எல்லைக்குள் வழங்கப்படும் கொடையின் அளவு பொறுப்பான அமைச்சுச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**ii.** **விளையாட்டு அபிவிருத்தி**

மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளருடைய மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பரிந்துரை மீது பதிவு செய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கு ரூபா.25,000 /- என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக விளையாட்டுப் பொருட்கள் வழங்க முடியும். இங்கே, இதற்கு முன் சம்பந்தப்பட்ட விளையாட்டுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவற்றின் பாவனை தொடர்பான மதிப்பீடுகளும் செய்யப்பட வேண்டும். மாவட்ட, மாகாண அல்லது தேசிய மட்டத்தில் விளையாட்டப் போட்டிகளுக்கு பிரதிநிதித்துவம் செய்யும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைளுக்கு அத்தியாவசியமான உடைகள் அல்லது விளையாட்டுப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்காக ஒரு விளையாட்டு வீரருக்கு-விளையாட்டு வீராங்கனைக்கு மாவட்ட மட்டப் போட்டியின் பொருட்டு ரூபா.3,000/- மும், மாகாண மட்டப் போட்டியின் பொருட்டு ரூபா.5,000/- மும், தேசிய மட்டப் போட்டியின் பொருட்டு ரூபா.7,500/- மும், என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக நேரடி உதவிகள் வழங்க முடியும். மேலும், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்கள் மூலம் நடாத்துகின்ற விளையாட்டு விழாவுக்கு ரூபா.5,000/- ம் என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டதாக உதவு தொகை வழங்க முடியும்.

அளவு கோல் அடிப்படைக் கொடையின் கீழ் உறுப்பினர் ஒதுக்கீட்டை நோக்கி இந்தச் சுற்றறிக்கை அறிமுகப்படுத்தும் விதிமுறைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக அவசிய வழிகாட்டுதல்கள் அந்தந்த மாகாணசபையின் தொடர்பான அமைச்சுச் செயலாளரால் தயாரிக்கப்பட்டு தொடர்பான அதிகாரியின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக,

- நேரடிக்கொடைகளில் நிதி அல்லது பொருட்கள் வழங்கும் முறை தொடர்பான நடைமுறைகள்
- பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்களில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த பயனாளிகளின் எண்ணிக்கை
- பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது அப்பொருட்களின் நிலை, வகை, மற்றும் அவற்றின் தரங்கள் ஆகியவை.
- திட்டத்தெரிவு தொடர்பாக நடைமுறை

**9.** **நிர்வாகச் செலவுகள்**

மூலதனச் செலவுகள் தொடர்பாக மாகாணசபைகளால் ஒதுக்கப்பட்ட எந்தவிதமான ஒதுக்கீடுகளும் நிர்வாகச் செலவுகளின் பொருட்டு நிதி ஒதுக்கக் கூடாது. இது தொடர்பாக என்னால் அனுப்பப்பட்ட FC/3/3/2014 இலக்கமுடைய 2014-12-31 திகதி கொண்ட கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் இப்போதும் வலுவுடைத்தாக இருக்கும்.

இந்தச் சுற்றறிக்கை தொடர்பாக மாண்பு மிகு ஆளுநர், மாண்பு மிகு முதலமைச்சர் உட்பட அரசியல் தலைவர்கள், சகல மாகாண அமைச்சுச் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்கள/ நிறுவனத்தலைவர்கள் மற்றும் தொடர்பான ஏனைய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிப்பதோடு, 2015 ஏப்பரில் 01 திகதி முதல் இந்தச் சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கும் வண்ணம் தயவாகத் தெரிவிக்கின்றேன்.

(கையொப்பம்) டபிள்யு.எச்.முனசிங்க
செயலாளர்
நிதி ஆணைக்குழு

பிரதிகள்:

1. மாண்பு மிகு ஆளுநர்- சகல மாகாணங்களும்
2. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்
3. செயலாளர், நிதி அமைச்சு
4. செயலாளர், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. பிரதி பிரதம செயலாளர், ( திட்டமிடல் ) - சகல மாகாணங்களும்
6. பிரதி பிரதம செயலாளர், ( நிதி ) - சகல மாகாணங்களும்
7. உதவி கணக்காய்வாளர் நாயகம் - -சகல மாகாணங்களும்